# ரயில்வே பாதுகாப்பு கமிஷனர் சோதனை

சென்னை, ஜன. 21–

சென்ட்ரல் – தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரை, மெட்ரோ ரயில் பாதையில், ரயில்வே பாதுகாப்பு கமிஷனர், நேற்று சோதனை நடத்தினார்.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும்; விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும் மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

வண்ணாரப்பேட்டை – தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., இடையே ரயில் பாதை பணி முடிந்து உள்ளது.

இதையடுத்து, ரயில்வே பாதுகாப்பு கமிஷனர், நேற்று முன்தினம், வண்ணாரப்பேட்டை – சென்ட்ரல் இடையே, டிராலியில் சென்று, பாதுகாப்பு சோதனை நடத்தினார்.



ரயில் பாதை மற்றும் வழியில் உள்ள மண்ணடி மற்றும் ஐகோர்ட் மெட்ரோ ரயில் நிலையங்களிலும் சோதனை நடத்தினார்.

நேற்று, சென்ட்ரல் – தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரை, பாதுகாப்பு கமிஷனர், டிராலியில் சென்று, ரயில் பாதையை ஆய்வு செய்தார்.

அரசினர் தோட்டம், எல்.ஐ.சி., ஆயிரம் விளக்கு மற்றும் தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., நிலையங்களில் செய்யப்பட்டுள்ள வசதிகள், பாதுகாப்பு செயல்பாடுகளையும், ஆய்வு செய்தார்.

நள்ளிரவு, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, 80 கி.மீ., வேகத்தில், மெட்ரோ ரயில் இயக்கி, சோதனை நடத்தினார்.

ரயில்வே பாதுகாப்பு கமிஷனர், இப்பாதையில், ரயில் இயக்க ஒப்புதல் அளித்ததும், இம்மாத இறுதியில், டி.எம்.எஸ்., நிலையத்தில் இருந்து, வண்ணாரப்பேட்டை வரை, மெட்ரோ ரயில் போக்குவரத்து நீட்டிக்கப்படும்.